**உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரை மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுக்கான இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிதியத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- முகாமைத்துவத்தினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் மற்றும் நிலைமையின் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து நிலைத்திருந்தல் தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை உள்ளதாக என்பது சம்பந்தமாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள்

அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானம்

### 1.5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| 2015 திசெம்பர் 25 ஆந் திகதிய பீஈடீ 1/2015 ஆம் இலக்க சுற்றுநிருபம் | போக்குவரத்து கொடுப்பனவிற்காக உரித்தற்ற பதவிகளில் சேவையாற்றிக் | தற்போது கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டுள்ளது. | சுற்றுநிருப அறிவுரைகளுக்கு இணங்கி இருக்க வேண்டும். |

| | |
|---|---|
| கொண்டிருக்கும் இரண்டு உதவி பெண் பணிப்பாளர்களுக்கு முறையான அங்கீகாரமின்றி 2017 நவம்பர் மாதத்திலிருந்து 2019 யூன் மாதம் வரை ஒரு மாதத்திற்கு ரூபா 17,500 வீதம், ரூபா 700,000 போக்குவரத்து கொடுப்பனவொன்று செலுத்தப்பட்டிருந்தது. | உரித்தற்ற வகையில் செலுத்தப்படுகின்ற கொடுப்பனவுகள் திருப்பி அறவிடப்பட வேண்டும். |

### 1.5.2 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| பல்லாண்டு பயிர்கள் அபிவிருத்தி செயற்திட்டம் ஒன்றிற்காக இலங்கை மத்திய வங்கியில் திறக்கப்பட்டு பேணப்பட்டு வந்த செயற்திட்ட கணக்கொன்று அந்த செயற்திட்டம் நிறைவடைந்த பின்னரும் அந்தப் பெயரிலேயே நிதிக் கூற்றில் நடைமுறை கணக்குகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டிருந்தது. | இந்த கணக்கு உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம் என்ற பெயரில் இலங்கை மத்திய வங்கியில் பேணப்பட்டு வருகின்ற நடைமுறைக் கணக்கொன்றாகும். பல்லாண்டுப் பயிர்கள் அபிவிருத்தி செயற்திட்டம் நிறைவடைந்தாலும் அதற்குரிய கடனை அறவிடுவதற்கும் அவ்வாறு அறவிடப்பட்ட பணம் திறைசேரிக்கு செலுத்துதலும் நிறுவனத்தினால் மேலும் இடம்பெற்றுக் கொண்டிருப்பதுடன் உரிய கடன்களை அறவிடுதல் மற்றும் திறைசேரிக்கு செலுத்துதல் நிறைவடைந்த பின்னர் உரிய கணக்கை மூடிவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | மத்திய வங்கிக்கு நடைமுறைக் கணக்குகளை பேணிச் செல்ல முடியாததுடன் இது நிறைவு செய்யப்பட்ட செயற்திட்டத்திற் குரிய டொலர் கணக்கொன்றாகும். செயற்திட்டம் நிறைவடைந்து ள்ளதுடன் இந்த டொலர் கணக்கை நிறைவு செய்து மீதியை நிதியத்தின் கணக்கிற்கு மாற்றப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 69,122,865 இலாபமொன்றாக காணப்பட்டதுடன் இதற்கு ஒத்த முன்னைய வருடத்தின் இலாபம் ரூபா 69,222,613 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவில் ரூபா 99,748 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த பற்றாக்குறைக்கு மீளாய்வாண்டின் தேறிய வட்டி வருமானம் ரூபா 11,786,342 வினால் அவ்வாறென்றால் நூற்றுக்கு 8.97 இனால் குறைந்தது பிரதானமான காரணமாக காணப்பட்டது.

## 2.2 பிரதான வருமானங்கள் மற்றும் செலவின விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

| பிரதான வருமானங்கள் / செலவினங்கள் | 2020 (ரூபா) | 2019 (ரூபா) | வேறுபாடு (ரூபா) | வேறுபாடு சதவீதத்தில் (%) |
|---|---|---|---|---|
| வட்டி வருமானம் | 274,899,048 | 266,181,649 | 8,717,399 | 3.3 |
| ஏனைய செயற்பாட்டு வருமானங்கள் | 86,101,946 | 133,929,246 | (47,827,300) | (35.7) |
| வட்டி செலவு | 131,744,730 | 134,813,672 | (3,068,942) | (2.3) |
| தேறிய தேய்வு | 115,998,584 | 153,588,013 | (37,589,429) | (24.5) |
| கடன் பாதித்தமை | 7,646,096 | 4,687,918 | 2,958,178 | 63.1 |

முன்னைய வருடத்தின் நிதிக்கூற்றுக்களுக்கு இணையாக ஏனைய செயற்பாட்டு வருமானம் ரூபா 133,929,246 இல் இருந்து ரூபா 86,101,946 வரை ரூபா 47,827,300 வினால் குறைவதற்கு வைப்பு வட்டி விகிதம் குறைந்தது காரணமாயிருந்தது. அவ்வாறே முன்னைய ஆண்டின் ரூபா 153,588,013 ஆன தேறிய தேய்வு மீளாய்வாண்டிலே ரூபா 115,998,584 வரை, அவ்வாறென்றால் ரூபா 37,589,429 வரை குறைவதற்கு தேய்வுக்கான அடிப்படையான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் மீதி குறைந்தது காரணமாயிருந்தது.

முன்னைய ஆண்டின் ரூபா 266,181,649 ஆன வட்டி வருமானம் ரூபா 274,899,048 வரை ரூபா 8,717,399 வினால் உயர்வடைந்திருந்தது. கடன் அறவிடுதல் நிலையான பேணிச் செல்லல் மற்றும் விளைவற்று காணப்பட்ட கடன் செயற்திட்டம் சிலவற்றை மீள் கட்டமைக்கப்பட்டு மீண்டும் அறவிடுவதற்கு ஆரம்பித்தல் இந்த விருத்திக்கு காரணமாகியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ பலவீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2010 ஏப்ரல் 08 ஆந் திகதி முகாமைத்துவச் சேவைத் திணைக்களம் அங்கீகரித்த ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் பொருத்தமான தகுதிகளை உடைய நபர் ஒருவர் நிதியத்தின் பணிப்பாளராக ஆட்சேர்க்கப்பட வேண்டிய போதிலும் நிலையான உத்தியோகத்தர் ஒருவர் இந்த பதவிக்காக நியமிக்கப்பட்டிருக்க வில்லை. இரட்டை அடிப்படையில் பணிப்பாளர் ஒருவரை ஆட்சேர்ப்பதற்கு முடியுமான வகையில் ஆட்சேர்ப்பு நடைமுறையும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிக்க வில்லை என்பதுடன் தொடர்ச்சியாக வேலைபார்க்கும் | இது தொடர்பாக ஆணையாளர் சபைக்கு அறியத் தந்திருப்பதுடன் 2021 யூன் 30 ஆந் திகதி இடம்பெற்ற ஆணையாளர் சபைக்கு இது தொடர்பாக பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நீண்ட காலம் வேலை பார்க்கும் பதவிகளுக்கு நியமிப்பது நிறுவனத்தின் செயலாற்றலுக்கு மோசமாக பாதிக்குமென்பதால் வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பதவியொன்றாக இடம்பெறுகின்றமையினால் நிறுவனத்தின் செயலாற்றலுக்கு மோசமான முறையில் பாதிப்பை ஏற்படுத்தியிருப்பதுடன் உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சின் செயலாளரின் PL/4/11/1/2/7 இலக்க மற்றும் 2019 யூலை 14 ஆந் திகதிய கடிதத்தில் அந்த அமைச்சின் மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சிப் பிரிவின் பணிப்பாளர் (திட்டமிடல்) நிதியத்தின் பிரதான நிறைவேற்றுப் பணியில் வேலை பார்ப்பதற்காக நியமிக்கப்பட்டிருந்ததுடன், அந்த பணிப்பாளர் (திட்டமிடல்) அப்போதே உலக வங்கியில் நிதியத்தின் கீழ் நடைமுறைப் படுத்தப்படுகின்ற அபிவிருத்தி செயற்திட்ட மொன்றான பிரதேச அபிவிருத்திச் செயற்திட்டத்தின் செயற்திட்ட பணிப்பாளராகவும் கடமையாற்றிக் கொண்டிருந்தார். இதன் பிரகாரம் அவரால் ஒரே நேரத்தில் 3 பதவிகளில் கடமையாற்றிக் கொண்டு உரிய கொடுப்பனவுகள் பெறப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | 1993 இன் 24 ஆம் இலக்க உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி (திருத்தம்) சட்டத்தின் ஊடாக திருத்தப்பட்ட 1916 இன் 22 ஆம் இலக்க உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 03 ஆவது பிரிவின் பிரகாரம் பதவியணியினரை நியமிக்கும் அதிகாரம் ஆணையாளர் சபையிடம் காணப்பட்ட போது ஆணையாளர் சபையின் அங்கீகாரமின்றி அதற்குரிய அமைச்சின் செயலாளரினால் நிறுவனத்தின் பணிப்பாளர் பதவியில் வேலைப் பார்ப்பதற்கு / கடமைகளை நிறைவேற்றுவதற்கு | இது தொடர்பாக நிறுவனத்தினால் மேற்கொள்ள முடியுமான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன், நிறுவன மற்றும் அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிலும் ஆணையாளர் சபையிலும் கலந்துரையாடலுக்கு எடுக்கப்பட்டது. இறுதியாக உரிய பணத்தை அறவிடுவதற்காக ஞாபகமூட்டல் கடிதமும் அனுப்பப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், 2021 பெப்ரவரி 25 ஆந் திகதி இடம்பெற்ற ஆணையாளர் | சட்டங்கள் விதிகளுக்கு முரணாக செலுத்தப்பட்ட வேலைபார்க்கும் சம்பளம் போக்குவரத்து கொடுப்பனவு மற்றும் எரிபொருள் கொடுப்பனவு என்பவற்றை மீண்டும் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | |
|---|---|
| கணக்காளர் சேவையிலுள்ள உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். மேலும், 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் அந்த உத்தியோகத்தருக்காக சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவையின் VII ஆவது பந்தியின் 12:5:4 ஆம் பிரிவு மற்றும் 12:8 ஆம் பிரிவிற்கு முரணாக ரூபா 382,056 வேலைபார்க்கும் சம்பளம் மற்றும் 2008 யூலை 28 ஆந் திகதிய அரச வியாபாரச் சுற்றுநிருபம் பீஈடீ/50 ஆம் இலக்கத்தின் 5 ஆம் பந்தி மற்றும் 2015 மே 25 ஆந் திகதிய பீஈடீ1/2015 ஆம் இலக்கத்தின் அரச வியாபார சுற்றுநிருபத்தின் 3.7 ஆம் பந்திக்கு முரணாக போக்குவரத்துக் கொடுப்பனவு ரூபா 522,000 மற்றும் எரிபொருள் கொடுப்பனவு ரூபா 340,849 ஆக மொத்தம் ரூபா 1,244,905 செலுத்தப்பட்டிருந்தது. | சபையில் உரிய உத்தியோகத்தர் தொடர்பாக முறையான ஒழுக்காற்று பரிசீலனை ஒன்றை மேற்கொள்வதற்காக உரிய ஒழுக்காற்று அதிகாரியான அரச சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளருக்கு எழுத்து மூலமாக அறியத் தருவதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன் 2021 ஏப்ரல் 08 ஆந் திகதி அரச சேவைகள் ஆணைக்குழுவிற்கு எழுத்து மூலமான தேவையான தகவல்கள் அறிவிக்கப்பட்டது. |

## 3.2 செயற்பாட்டு பலவீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டிலே நிதியத்தின் மூலம் மொத்த பெறுமதி ரூபா 268,627,600 ஆன 15 கடன் செயற்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்த துடன் அவற்றுள் மொத்தப் பெறுமதி ரூபா 37,600,000 ஆன 02 கடன் செயற்திட்டங்களின் கொடுப்பனவு ஆரம்பிக்கப்பட்டு வருட இறுதியாகும் போது ரூபா 20,780,000 அவ்வாறென்றால் நூற்றுக்கு 55.26 மாத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தது. | நிர்மாணப் பணிகளின் முன்னேற்றத்தின் அடிப்படையில் கடன் தொகை விடுவிக்கப்படுவதுடன், இவ்வாறான நிலைமையொன்று ஏற்பட முடியும். | நிதியத்தின் பிரதான வேலை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு கடன் பெற்றுக் கொடுப்ப தென்பதுடன் அங்கீகரிக்கப்பட்ட கடனை விரைவாக விநியோகிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2014 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரை நிதியத்தின் மூலம் 139 கடன் செயற்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்த துடன், அதில் 48 கடன் செயற்திட்டங்கள் உள்ளூராட்சி நிறுவனங்களினால் நிராகரிக்கப்பட்டிருந்தது. | 03/2018 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் வாகன கொள்வனவு இடையூறாவதற்கு நாட்டிற்குள் காணப்படுகினற தற்போதைய நிலைமை காரணமானது. | நிதியத்தின் பிரதான வேலை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு கடன் பெற்றுக் கொடுப்ப தென்பதுடன் அங்கீகரிக்கப்பட்ட கடனை விரைவாக விநியோகிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | 2020 திசெம்பர் 31 ஆந் திகதியாகும் போது மொத்த பெறுமதி ரூபா 419,177,427 ஆன 18 கடன் செயற்திட்டங்கள் செயற்படாத கடனாக காட்டப்பட்டிருந்ததுடன் அந்தக் கடன் செலுத்தப்படாதிருந்த காலம் 2 ½ வருடங்களில் இருந்து 21 வருடங்கள் வரையான கால வீச்சொன்றைப் பெற்றிருந்தது. மேலும் ரூபா 260,624,776 மீள் கட்டமைக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் ரூபா 158,552,651 கடனை அறவிடுவதற்கு முடியாது போயிருந்தது. | கடன் அறவீட்டிற்காக நிதியம், உயர்ந்த பட்ச முயற்சிகளை மேற்கொண்டதுடன் 06 செயற்திட்டங்களின் அறவீடு கடினமாக உள்ளது. | நிலுவை கடனை அறவிடுவதற்கான செயல் நடைமுறைகள் வினைத்திறனாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | 2019 ஆம் ஆண்டிலே மொத்தப் பெறுமதி ரூபா 1,916,490,000 ஆன 33 கடன் செயற்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த செயற்திட்டங்களின் மொத்தப் றெுமதி ரூபா 991,690,000 ஆன 19 கடன் செயற்திட்டங்கள் அவ்வாறெனில் நூற்றுக்கு 57 சதவீதமானவை 2020 ஆம் ஆண்டிலே இரத்துச் செய்யப்பட்டிருந்தது. | நீங்கள் எடுத்துக் காட்டியது சரியானது. இது தொடர்பாக தேவையான முறையான விடய நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. | கடன் அங்கீகரிக்கப்படும் செயல்முறை மீண்டும் மீளாய்வுக்குட் படுத்தப்பட்டு திருத்தப்பட வேண்டும். |

## 3.3 சர்ச்சைக்குரிய தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| கையேட்டின் அவசியத்தன்மை தொடர்பான அறிவின்றி மற்றும் எதிர்பார்த்த இலக்கு மற்றும் தர நிலையை கருத்திற் கொள்ளாமல் விலைமனுக் கோரிக்கை முறையின் கீழ் விலைகளைப் பெற்றுக் கொண்டு நிதியத்திற்கான கையேட்டை தயாரிப்பதற்காக பிணைக் காப்பொன்று இல்லாமவ் ரூபா 200,000 முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. கையேடுகளின் அளவு மற்றும் தரம் தொடர்பாக மதிப்பீட்டை மேற்கொள்ளாமல் கொடுப்பனவிற்காக இருந்த எஞ்சிய தொகையில் நூற்றுக்கு 50 ஆன ரூபா 100,000 தொகையை கட்டுப்பாட்டு சபையின் காப்பு அங்கீகாரத்தின் கீழ் செலுத்தப்பட்டிருந்தது. | இந்த நிறுவனத்தின் செயல் நடவடிக்கை கையேடு தயாரிக்கப்பட்டது 2016 ஆம் ஆண்டில் இருந்து நடைமுறையிலுள்ள, நிறுவனத்தின் மீள கட்டமைப்பு வேலைத்திட்டத்தின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட இறுதி அறிக்கையின் பரிந்துரையின் அடிப்படையிலாகும். அதன் பிரகாரம் 2018 ஆம் ஆண்டின் நிறுவனத்தின் செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இந்த வேலை உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் இந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் வேலைகள் மற்றும் உரிய செலவு தலைப்புக்களுக்கு 2017 திசெம்பர் 05 ஆந் திகதி இடம்பெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் பரிந்துரையின் பிரகாரம் 2017 திசெம்பர் 15 ஆந் திகதி இடம்பெற்ற ஆணையாளர் சபையின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றது. அதன் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட நிறுவனத்தின் நிதிப் பிரிவை மீள்கட்டமைத்தலின் கீழ் நிதிக் கையேடும், மனிதவள மற்றும் நிர்வாகப் பிரிவை மீள் கட்டமைத்தலின் கீழ் மனிதவள மற்றும் நிர்வாகக் கையேடும் தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக Terms of Reference (TOR) தயாரிக்கப்பட்டு விலை மனுக் கோரப்பட்டு குறைந்த விலையை சமர்ப்பித்த நிறுவனத்திற்கு இந்த வேலைகள் | பெறுகை சுற்றுநிருபத்திற்கு இணங்கியிருக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. இந்த கையேடுகளின் தரம் மற்றும் அளவு தொடர்பாக பரிசீலிப்பதற்காக 2019 ஏப்ரல் 04 ஆந் திகதி தலைவரினால் குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன் அதன் அறிக்கை கிடைக்கப் பெற்றதன் பின்னர் தேவையான மாற்றங்கள் காணப்படுமாயின், அவற்றையும் சேர்த்து இந்த கையேட்டிற்கான தேவையான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கும் அதனைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிதியத்திற்காக உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் வரைவு அமைச்சின் ஊடாகவும் உள்ளக கணக்காய்வொன்று மேற்கொண்டிருக்கவில்லை. | வரைவு அமைச்சினால் உள்ளக கணக்காய்வு மேற்கொள்வதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | சரியான வகையில் கட்டமைப்பை ஸ்தாபித்தல், மற்றும் அது முறையான வகையில் செயற்படுவதாக அடிக்கடி பரிசீலிப்பதற்காக உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை நியமிப்பது மிகவும் பொருத்தமானது. |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| வருடத்திற்காக 4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்க வேண்டிய போதிலும் ஒரு கூட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. | கொவிட் 19 தொற்று நிலைமை காரணமாக உரிய முறையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்த முடியாது போனது. | நிதியத்தின் நடவடிக்கைகள் முறையாக பேணப்பட வேண்டும். |

**4.3 நிலைபேறான அபிவிருத்தியின் நோக்கங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ‘‘ஐக்கிய நாடுகளின் 2030 வருட நிகழ்ச்சி நிரல்’’ பிரகாரம் மீளாய்வாண்டிற்குரிய நிதியத்தால் தமது விடயப் பரப்பின்கீழ் வருகின்ற வேலைகள் சம்பந்தமாக எவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென்பது தொடர்பாக அறிந்து கொள்ளப்பட்டிருக்க வில்லை. அதன் காரணமாக நிதியத்தின் விடயப்பரப்பின் கீழ் வருகின்ற நிலைபேறான அபிவிருத்தியின் நோக்கம், இலக்கு மற்றும் அந்த இலக்கை நோக்கி அண்மிக்க வேண்டிய திருப்பு முனையும் இலக்கை நோக்கி அண்மிப்பதை அளவிடுவதற்கான குறிகாட்டியும் அடையாளங் கண்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | நிலைபேறான அபிவிருத்தியின் இலக்கை அடையாளங் கண்டு நிரந்தரமான உத்தியோகத் தருக்கு பொறுப்புக்களை கையளிக்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுவதற்கு முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட வேண்டும். |